# 2 பேர் மரணம்; 3500 பேர் வீடிழந்தனர்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 889

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 189

யாழ்ப்பாணம் ஆவணி 5 ஜீ ஆங்கி 29 சனிக்கிழமை (21-8-71)

## இரத்தினபுரியில் வெள்ளக் கொடுமை

கொழும்பு, வியாழன்
இரத்தினபுரிப் பகுதியில் வெள்ளம் காரணமாக சுமார் 3500 பேர் வீடுகளை இழந்து திக்கற்றுள்ளா யிருக்கிறார்கள்

இங்கு இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்கள். இரத்தினபுரிநகர் நீரில் மூழ்கியுள்ளது.

இரத்தினபுரி அரசாங்க அதிபரும் மற்றவர்களும் வீடுகளை இழந்துள்ளவர்களுக்கு தற்காலிக வசிப்பிடம் ஏற்படுத்திக்கொடுப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

களனி ஆற்றில் நாளை அதிகாலையில் பெருவெள்ளம் ஏற்படலாமென காலநிலை அவதானநிலையம் அறிவித்தது.

தெற்கு தென்மேற்கு பகுதிகளில் பெருமழைபெய்யுமென்றும் இதனால் பெருவெள்ளம் ஏற்படலாமென்றும் அவதானநிலையம் அறிவித்துள்ளது.

காலி, வத்தேகம ஆகிய இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் தபால் தந்தித் தொடர்பு பாதிக்கப்பட்டுள்ளதோடு சில இடங்களில் போக்குவரத்தும் துண்டிக்

6-ம் பக்கம் பார்க்க)

# மாவை ஆலய இடைக்கால தடை உத்தரவு ரத்து

## அட்டோர்னி ஜெனரலின் வாக்குறுதி ஏற்கப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

அட்டோர்னி ஜெனரலுக்கு எதிராக வழங்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு ஏ வைத்திலிங்கத்தினால் நீக்கப்பட்டது.

பூஜைகள் நடக்காத பட்சத்தில்பொலிஸார் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை உடைத்து திறக்கமாட்டார்களென அட்டோர்னி ஜெனரல் தரப்பில் அளிக்கப்பட்ட வாக்குறுதியைத் தொடர்ந்தே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

மாவிட்டபுர ஆலய ஆதீனகர்த்தா துரைச்சாமிக்குருக்கள், வி சுந்தரலிங்கம் ஆகியோர் அட்டோர்னி ஜெனரலுக்கு எதிராக மாவை ஆலயக்கதவை பொலிசாரோ அரசாங்க சார்பில் எவருமோ உடைத்துத்திறக்கக் கூடாதென உத்தரவிடுமாறு கோரி ஜூலை மாதம் 3ம் திகதி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை ஜூலை 19ம் திகதி விசாரணை செய்த மாவட்ட நீதிபதி திரு வைத்திலிங்கம் அட்டோர்னி ஜெனரல் மீது இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தார்

அப்போது மாவட்ட நீதிபதி தமது இடைக்கால உத்தரவில் தெரிவித்திருந்ததாவது:

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பூசை நடைபெறுத காரணத்தினால் பூட்டப்பட்டிருக்கும் பட்சத்திலும், குருக்களும் கோவில் ஊழியர்களும் பணியாட்களும் தவிர வேறு எந்த ஒருவரும் கோவிலுக்குள் செல்லாத பட்சத்திலும் அட்டோர்னி ஜெனரலோ பொலிஸ்மா உட்பட அவரது பணியாட்களோ ஏஜண்டுகளோ அல்லது பொலிஸாரின் கடமைகளைச் செய்பவர்களோ அரசாங்க ஊழியர்களோ கோவில் கதவுகளைக் கட்டாயமாகத் திறக்கவோ அல்லது உடைத்துத்திறக்கவோ கூடாதென தடைஉத்தரவு விதிக்கிறேன்

நாட்டின்சட்டத்தின்கீழும் குற்றவேலைதய சட்ட 4 (1) (பி) பிரிவின்கீழும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சாதாரண கடமைகளைச் செய்வதற்கு இந்த உத்தரவு எந்தவிதத்திலும் தடையாக இருக்காது. ஆலயக் கதவுகளை இந்த உத்தரவு பிறப்பிக்க அல்லாமல் குற்றம் புரியும் நோக்கத்துடன் பூட்டப்பட்டிருப்பதாக நம்புவதற்கு நியாயமான காரணம் இருந்தால் இந்த உத்தரவு பொலிஸார் சாதாரண கடமைகளைச் செய்யத் தடையாக இருக்காது.

அட்டோர்னிஜெனரல் சார்பில் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதியை முதலாம் மனுதாரர் சார்பில் ஆஜரான அட்வக்கேட் ஏ. வி குலசிங்கம், அட்வக்கேட் ரி. சோமசுந்தரம் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர். இரண்டாம் மனுதாரர் சார்பில் ஆஜரான அட்வக்கேட் வி. சுந்தரலிங்கம் இதனை ஆட்சேபித்தார். இதைத் தொடர்ந்து மாவட்ட நீதிபதியினால் அட்டோர்னிஜெனரலுக்கு எதிராக வழங்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவு நீக்கப்பட்டது

1-வது மனுதாரர் சார்பில் அட்வக்கேட் ஏ. வி. குலசிங்கம் அட்வக்கேட் ரி சோமசுந்தரத்தின் உதவியுடனும், புறக்டர் ஏ உலகநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானர் 2-வது மனுதாரர் சார்பில் அட்வக்கேட் வி சுந்தரலிங்கம் அட்வக்கேட் ராஜராஜேஸ்வரன் தங்கராசாவின் உதவியுடனும் புறக்டர் ஏ உலகநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானர்

எதிர்மனுதாரர் சார்பில் அட்வக்கேட் எல் டி குருசாமி, புறக்டர் எஸ் கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்

அட்டோர்னி ஜெனரல் வழக்கு:

## செப். 3-ந் திகதி தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

மாவை ஆலய வழக்குத் தீர்ப்பு செப்டம்பர் மாதம் 3ந் திகதி வழங்கப்படவிருக்கிறது இவ்வழக்கு நேற்றுக்காலை மாவட்ட நீதிபதி திரு ஏ வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கு, மாவை ஆதீனகர்த்தா திரு துரைசாமிக்குருக்கள், வி. சுந்தரலிங்கம் ஆகியோர் மாவை ஆலயத்துள் செல்லும் எவரையும் தடுக்கக்கூடாதென உத்தரவிடுமாறு கோரி அட்டோர்னி ஜெனரலினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மனுதாரர், எதிர்மனுதாரர் சார்பில் நேற்றுத் தொகுப்புரைகள் நிகழ்த்தப்பட்டன மனுதாரர் சார்பில் அட்வக்கேட் எல். டி. குருசாமி புறக்டர் எஸ். கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிர்மனுதாரர் சார்பில் அட்வக்கேட் வி. சுந்தரலிங்கம், அட்வக்கேட் ரி. சோமசுந்தரம், அட்வக்கேட் ராஜராஜேஸ்வரன் தங்கராசா ஆகியோரின் உதவியுடனும், புறக்டர் ஏ உலகநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

## அமைச்சர் சுபசிங்கா வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா இம்மாதம் 27-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றார். திரு சுபசிங்கா அமைச்சர் என்ற முறையில் யாழ்ப்பாணம் வருவது இதுவே முதல் தடவையெனத் தெரிகிறது. அவர் இங்கு மூன்றுநாட்கள் தங்கியிருப்பார்.

## புனிதநகர்

பொலநறுவை, வெள்ளி

பொலநறுவ நகரம் நாளை சனிக்கிழமை முதல் புனித நகராகப் பிரகடனப்படுத்தப்படுகிறது

# நான்கு மாவட்டங்களில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு

### கிரிக்கெட்

லண்டன், ஆகஸ்ட் 20

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையேயான மூன்றுவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2வது நாளான இன்று போட்டி மழை காரணமாக நடைபெறவில்லை. நேற்று துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக்கோஷ்டி தனது முதலாவது இனிங்ஸில் 355 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கொழும்பு, வெள்ளி

ஊரடங்குச்சட்டம் மீண்டும் நான்குமாவட்டங்களில் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது,

கொழும்பிலும் மேல்மாகாணத்திலும் தொடர்ந்து ஊரடங்குச்சட்டம் இருந்து வரும்,

வவுனியா, அனுராதபுரம் பொலநறுவை, புத்தளம் ஆகிய நிர்வாக மாவட்டங்களில் புதிதாக ஊரடங்குச்சட்டம் நாளை(சனி) முதல் அமுலுக்கு கொண்டுவரப்படுகிறது;

இம்மாவட்டங்களில் தினமும் இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரையும் ஊரடங்குச்சட்டம் அமுலிலிருக்கும்,

கொழும்பிலும் மேல்மாகாணத்திலும் வழமைபோல் இரவு 11 மணிமுதல் அதிகாலை 4மணிவரை ஊரடங்குச்சட்டம் இருக்கும்.

**வெலிங்டன் சினிமா** (?)
வெலிப்பாய்
பி. ப. 2-30, 6-30, 10-00
ஏ.வி.எம். ராஜன்-வாணிஸ்ரீ
நடித்த
**அன்னையும் பிதாவும்**

MANOHARA- Jaffna
Daily
4-45, 7-00 & 9-45 p.m.
Saturday, Sunday 10-30 a m
Tony Russel Maria Phershy
in
FROM CAIRO
WITH LOVE
(Scope Color

REGAL Jaffna
Daily at 5-15 & 7-15 p. m. only
Saturday & Sunday 10-30 a. m.
Clint Eastwood in
HANG EM HIGH (color)

**றீகல்** யாழ்ப்பாணம் தினசரி பி. ப. 2-00
இரவு 9-45 மட்டும்
ஜெமினி - விஜயகுமாரி - நாகேஷ்
ராஜ்ஸ்ரீ - ஜி. வரலக்ஷ்மி
நடித்த
**அவரே என் தெய்வம்**
ஒரு குடும்பச் சித்திரம்

**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10-00 மணி
★ எம், ஜி. ஆர்.
★ வைஜந்திமாலா
★ பாலையா
நடித்த
**பாக்தாத் திருடன்**

**ராணி** (யாழ்ப்பாணம்) சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
பி. ப. 2-30 இரவு, 6-30, 10-00 நடித்த
**கஸ்தூரி திலகம்**

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி, ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்
அசோகன், ஜோதிலட்சுமி, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
**தலைவன்**

இப்பொழுது திரையிடப் படுகிறது
**வெலிங்டன் லிடோ**
(யாழ் நகர்) (யாழ்.நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 | காலை 10-30, பி. ப. 2-00
இரவு 10-00 மணி | மாலை 6-00, இரவு 9-30
மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா—மைலன்
திரைகளில்
நடிகர் திலகம்
★ சிவாஜிகணேசன்
(3 வேடங்களில்)
★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ நம்பியார்
★ சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்
**தெய்வ மகன்**
திரைக்கதை — டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 21—8—71**

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அலை 61 மீ**

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கத்தோலிக்கநற்சிந்தனை 6-20 துதிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமிய கீதங்கள்

**344 மீ அலை 49 மீ**

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ. அலை 61 மீ.**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 சிறுவர்பாடல்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 கல்விச்சேவை.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கலாச்சார நிகழ்ச்சி, 7-00 பழைய நினைவுகள், 7-15 நாடு 7-45 கலாச்சார நிகழ்ச்சித்தொகுப்பு. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித்தொகுப்பு.

## நிர்வாகிகள்

காங்கேசன்துறை, வெள்ளி

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அம்பனைக் கிளையை காங்கேசன்துறை அமைப்பாளர் பி பி முருகையா அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு ஏ தனிநாயகம்பி, உபதலைவர்கள்: திரு இ சிவானந்தம், திரு அ அப்பையா, திரு நா நாகேந்திரராசா, செயலாளர்: திரு செ கனகநாயகம் உபசெயலாளர்கள்: திரு த குணரத்தினம், திரு அ சோதிநாதரத்தினம், திரு ஆ சிவாமிர்தம் தனாதிகாரி: திரு ஆ சண்முகரத்தினம்.

## இரண்டு வெளிச்சவீடு

அம்பன், வெள்ளி

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள குடத்தனைக் கடற்கரையிலும் நாகர்கோவில் கடற்கரையிலும் இரு வெளிச்சவீடுகளை மீன்பிடி கூட்டுத்தாபனம் விரைவில் அமைக்கவிருக்கின்றது.

தற்போது பருத்தித்துறையில் மட்டுமே ஒரு வெளிச்சவீடு இருக்கின்றது. வடமராட்சி கிழக்குக் கரையோரமாக வாழும் மீனவர்கள் இரவு நேரங்களிலும் தொலைவிலும் சென்று மீன் பிடித்து திசை அறிந்து சுலபமாகத் திரும்பும் நோக்குடனேயே இவ்விரு வெளிச்ச வீடுகளும் அமைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக திரு வே கணேசன் இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


**நாகம்ஸ்சினிமா**
சுன்னாகம்
தினசரி: 4-30க்கு மட்டும்
சனி, ஞாயிறு: காலை 10-30
Jim Brown
in
100 RIFLES
தினசரி மாலை 6-30, 9-45
சனி, ஞாயிறு 2 30,
6-30, 9 45
எம் ஜி. ஆர் -சரோஜாதேவி
நம்பியார்
நடித்த
**ஆசை முகம்**



**தேவை**

பெற்ரோல் செற் முகாமையாளராகக் கடமையாற்ற ஒருவர் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். நா. நடராசா, பெற்ரோல் செற். உருமைராய். 3489


## விளையாட்டு விழா

சாய்ந்தமருது, வெள்ளி

காரைவாகு நிந்தாவூர் மற்றும் சாமியாதிராசி பிரிவுகளுக்கு இடையிலான சகல விளையாட்டுக் கழகங்களிடையிலும் நடைபெறும் விளையாட்டு விழாவொன்று ஆகஸ்ட் மாத முற்பகுதியில் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் கல்முனை எம் பி ஜனாப் எம். ஸி அகமது தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## வயோதிபமாது தற்கொலை

வல்வெட்டித்துறை, வெள்ளி

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த 61 வயதான கந்தன் வள்ளி பெண் பாறி கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இவர் பண நெருக்கடி காரணமாகவும், கடன் தொல்லை காரணமாகவும் தன் உயிரைப்போக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாக இவரின் கணவரும், மற்றும் பலரும் சாட்சிய மளித்தனர்.

மரண விசாரணை அதிகாரி திரு. வி பி சுந்தரலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## பிராணவாயுவை எடுத்துச்செல்ல நவீன கருவி!

நகரப்புறங்களில் ஜனப்பெருக்கம் ஒரு பெரும் பிரச்சினை. நகரப்புறங்களில் மிகச்சிறிய கடைகள் சந்தைகள் யாவற்றிலெல்லாம் மூச்சுவிடக்கூட முடியாத அளவு ஜனங்கள் குவிந்து நிற்பார்கள்.

ஆனால் இந்த ஜன நெருக்கடியைப் பற்றி இனிமேல் நாம் கவலைப்படத் தேவையில்லை. எந்த ஜன நெருக்கடியிலும் சுத்தமான காற்றைச் சுவாசிக்கத்தக்க வகையில் பிராணவாயு கொண்டு செல்லும் நவீன கருவி யொன்று இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யப்பானில் இக்கருவி பெருமளவில் பாவிக்கப்படுகிறது. இதன் விற்பனையும் இங்கு அதிகரித்துள்ளது. 'உங்களுக்கு வேண்டிய சுத்தமான காற்றை உங்களுடனேயே எடுத்துச் செல்லுங்கள்' என்ற சுலோகத்துடன் இந்த பிராணவாயு எடுத்துச் செல்லும் உபகரண விற்பனையாளர்கள் இக்கருவியை விற்பனை செய்கிறார்கள். இக்கருவி ஒரு சிறிய டிரான்ஸிஸ்டர் ரேடியோவிலும் பார்க்கச் சிறியதாகும்.

## சாம்பியன் போட்டி

மட்டக்களப்பு, வெள்ளி

கிழக்குப் பிரதேசப் பாடசாலைகளின் மெய்வல்லுனர் கழகம் தனது சீனியர் சாம்பியன் போட்டியை எதிர்வரும் 12-ம், 13-ம் திகதிகளில் நடத்தவிருக்கின்றது. மட்டக்களப்பு உ. வெ. வ. தி. விளையாட்டரங்கில் நடைபெறும் இப்போட்டியில் கிழக்குப் பிரதேச வித்தியாதிபதி ஜனாப். எம். சமீம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## வரி விளம்பரம்


மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

**விற்பனைக்கு**

விண்ணப்பப்பத்திரம்:
ஆசிரியர் கலாசாலை பயிற்சி விண்ணப்பப்பத்திரங்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். விபரங்களுக்கு: ஏ. ஸி. ஸ்ரேசனேஸ், 6, மெயின்வீதி, யாழ்ப்பாணம். 3497

அரைத்த சந்தனம்

அரைத்த சந்தனம்
உயர்தரமான சந்தனக் கட்டைகளை யந்திரத்தில் அரைத்த சந்தனக் குழம்பு. வாசனைமிக்கது, குளிர்ச்சியானது. கோவில்களிலும், எல்லாவிதமான வைபவங்களிலும், விழாக்களிலும் உபயோகிக்கச் சிறந்தது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, மருந்துக்கடை, யாழ்ப்பாணம். 3910

கார்
நல்ல நிலையிலுள்ள A 40 சி. என். தொடர்பிலக்க டெவன்கார் விலைக்கு உண்டு. 362, நாவலர் ரோட், நல்லூர் யாழ்ப்பாணம். 3491

கொழும்புத்துறை திருவனையார் வீதியில் உள்ள 12 பரப்பு இளந்தென்னங் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. (யோகர் சுவாமியார் வீட்டிற்கு அருகாமையில்) தொடர்பு கொள்க. திருமதி வீரசிங்கம், 103, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 3496

**தேவை**

பழைய பித்தளை அல்லது பாவிக்க முடியாத நிலையிலுள்ள செம்புச் சாமான்கள் தேவை. தகுந்த விலை கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். Samuel Sons & Co Ltd 206, 208. Hospital Road, Jaffna. 3250

**கல்வி**

ஜி. சி. ஈ. வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு முதலிய பாடங்களுக்கு வீடு தோறும் சென்று இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியர் களால் கற்பிக்கப்படும். தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 3483, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3488

மெக்கானிக் பயிற்சி:
போதனை செய்முறை எமது 12-வது வருட முழு நேர மோட்டார், டிராக்டர் டீசல் டிப்புளோமா பயிற்சி வகுப்புகள் 6-9-71ல் ஆரம்பமாக இருக்கின்றன. விபரத்துடன் கூடிய விண்ணப்பப் படிவங்களுக்கு அதிபர். ஸ்ரீராஜ் ஓட்டோமோபைல், எஞ்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை. 11/A & 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3488

**பின் போடப்பட்டுள்ளது**

பத்தமேனி கணேச சனசமூகநிலையத்தின் சார்பில் "நண்பர்களுக்கு மட்டும்" நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபசீட்டு இழுப்புகள் தவிர்க்கமுடியாத சில காரணங்களால் 27-8-71 வரை பின்போடப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகிறோம்.

இப்படிக்கு
கணேச ச. ச. நிலைய
2974 நிர்வாகிகள்.

# கி. பாகிஸ்தான் மாகாண சட்டசபை

# மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினர் பதவிகள் ரத்து

## யாஹ்யாகான் அரசு அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஆக. 20 கிழக்குப் பாகிஸ்தான் மாகாண சட்டசபை அவாமி லீக் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் உறுப்பினர் பதவிக்குத் தகுதியற்றவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பாகிஸ்தான் மாகாண சட்டசபை உறுப்பினர்கள் பதவிக்கு அவாமி லீக் உறுப்பினர்கள் 94பேர் தான் தகுதியுடையவர்கள் என இஸ்லாமாபாத்தால் இன்று அறிவிக்கப்பட்டது. சென்ற ஜூன் மாதம் ஜனாதிபதி யாஹ்யாகான் கிழக்குப் பாகிஸ்தான் அவாமி லீக் மீது சாட்டிய குற்றச்சாட்டின்பின் இப்பொழுது இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்ற டிசம்பர் மாதம் இங்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாகாண சட்டசபையிலுள்ள 300 இடங்களில் 288 இடங்களை அவாமி லீக் கைப்பற்றியிருந்தது.

### அமெரிக்கா ஆராயும்

அமெரிக்கக் கம்பனி ஒன்றின் இரு போயிங் விமானங்கள் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து துருப்புக்களை ஏற்றிக்கொண்டு கிழக்குப் பாகிஸ்தானுக்குச் சென்றதாகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அமெரிக்க ராஜாங்க இலாகா ஆராய்வதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இச்செயலில் ஈடுபட்ட இவ்விரண்டு வர்த்தக போக்கு வரத்து விமானங்கள் என்று சொல்லப்படுகிறது.

இந்த விமானங்கள் ஒவ்வொன்றிற்கும் மாதம் ஒன்றிற்கு 17 ஆயிரம் டாலரை பாகிஸ்தான் வாடகைப்பணமாகக் கொடுப்பதாக அறிவிக்கப்படுகிறது.

### முஸ்லிம் லீக் ஆதரிக்குமாம்

இந்திய அரசாங்கம் வங்காள தேசத்தை அங்கீகரிக்குமானால் அந்த நடவடிக்கைக்கு எமது கட்சியும், பாரத முஸ்லிம் மக்களும் ஆதரவளிப்பார்கள் என்று பாரத முஸ்லிம் கட்சியின் பிரதம காரியதரிசி இப்ராஹீம் சுலைமான்சேட் தெரிவித்துள்ளார்.

---

சர்வதேச நாணய நெருக்கடி

## பிரஸல்ஸ் பேச்சுவார்த்தை தோல்வியில் முடியுமா?

பிரஸல்ஸ், ஆகஸ்ட் 20 அமெரிக்க ஜனாதிபதி நிக்சனின் டாலர் நாணய பெறுமதி பற்றிய பொருளாதாரத் திட்டத்தினால் சர்வதேச நாணய பரிவர்த்தனையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி பற்றி பிரஸல்ஸில் கூடிய ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளின் நிதி அமைச்சர்களின் மகாநாட்டில் கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை என சொல்லப்படுகிறது.

இப்பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டதற்கு மேற்குஜெர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே கருத்துவேறுபாடு இருப்பதே காரணமாம். செப்டம்பர் 13-ந் திகதி நிதி அமைச்சர்கள் மீண்டும் கூடி ஆலோசிப்பர்.

### பொருளாதார நிபுணர் கண்டனம்

ஜனாதிபதி நிக்சனின் பொருளாதார நடவடிக்கையை அமெரிக்காவின் தலைசிறந்த பொருளாதார நிபுணர் குறைகூறியுள்ளார்" இவர் காலஞ்சென்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி, முன்னாள் ஜனாதிபதி ஜோன்சன் ஆகியோரின் பொருளாதார ஆலோசகராக இருந்தவர்.

### இந்தியாவைப் பாதிக்காதாம்

அமெரிக்க அதிபரின் நடவடிக்கையினால் அமெரிக்க இந்திய நாணய பரிவர்த்தனையில் எவ்வித பாதிப்பும் ஏற்படாதென இந்திய நிதி அமைச்சர் வை. பி. சவான் தெரிவித்தார்.

---

## அமைச்சர் கொல்வின் ரோம் செல்வார்

கோட்டை, வெள்ளி

ரோமாபுரியில் அடுத்த மாதம் 13ம் திகதி தொடக்கம் 23ம் திகதிவரை நடைபெறவுள்ள உணவு விவசாய ஸ்தாபனத்தின் தேயிலை வர்த்தக ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் சர்வதேச தேயிலை வர்த்தக ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்படுவது பற்றி ஆராயப்படவுள்ளது.

இலங்கையும் கலந்து கொள்ளவிருக்கும் இம்மாநாட்டில் இலங்கைக்குழுவிற்குத் தோட்டத் தொழில் துறை அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தலைமை தாங்குவார். இத் தூதுக் கோஷ்டியில் தோட்டத் தொழில்துறை அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. டொறிக டி. சூசா, தேயிலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. சி. சண்முகம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

---

## 'விஞ்ஞானக் கல்வி வசதி அளிக்கவும்'

காவடி, வெள்ளி

விஞ்ஞானம் கணிதம் ஆகியன போதிப்பதற்கு விசேஷ பயிற்சிபெற்ற ஆசிரியர்களை நியமித்தும், விஞ்ஞான உபகரணங்களை வழங்கியும், மாணவர்கள் தகுந்த விஞ்ஞானக் கல்விபெற வசதியளிக்கவேண்டும். அத்துடன் விளையாட்டிடம் ஒன்றும் அவசியமாகவும் இருக்கிறது என்று கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலைத் தலைமையாசிரியர் வடமாநில பிரதம கல்வியதிகாரியிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

---

## 360 வது சீட்டிழுப்பு

கோட்டை வெள்ளி

தேசிய லொத்தர் சபையின் 360-வது சீட்டிழுப்பு இம்மாதம் 24-ம் திகதிமாலை காலி பொது மைதானத்தில் நடைபெறுகிறது.

---

## திருட்டுமுயற்சி தோல்வி: பலகளவுகள் அம்பலம்

மாவிட்டபுரம்,வியாபட்டப்பாவில் வீட்டில் களவாட முயன்றவரை கையும்மெய்யுமாகப்பிடித்த சம்பவம் ஒன்று மாவிட்டபுரத்தையடுத்த வீமன்காமத்தில் இடம் பெற்றுள்ளது.

வீமன்காமத்திலுள்ளவை சரவணமுத்து என்பவருடைய வீட்டிற்குச் சென்று அவ்வீட்டிலிருந்த பணத்தையும் உடுப்புகள் மற்றும் பாத்திரங்களையும் களவாடிக் கொண்டிருக்கும் நேரத்தில் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த 25 வயதான சங்கரப்பிள்ளை சிவானந்தம் என்பவரை வீட்டுச் சொந்தக்காரர் கையும் மெய்யுமாகப்பிடித்து காங்கேசன் துறைப்பொலிசில் ஒப்படைத்தார். கடந்த 16ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தையொட்டி தீவிர விசாரணையில் ஈடுபட்ட காங்கேசன் துறைப் பொலிஸ் குற்றத் தடுப்பு பகுதியினர் மேலும் பலகளவுகளின் விபரங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

பிரஸ்தாபநபர் தாம் கொல்லங்கலட்டி இந்துகலவன் பாடசாலையில் இருந்து சில மாதங்களுக்குமுன் களவாடிய பொருட்களை விற்ற இடங்களைத்தெரிவித்ததையடுத்து பொலிசார் அவ்வெட்டியில் ஒருவீட்டில் வைத்து களவுபோனதாகக் கருதும் பொருட்களையும் கைப்பற்றினர். மாவிட்டபுரத்தைச் சேர்ந்த பால் விநியோக ஊழியர் ஒருவரின் வீட்டில் சென்ற சில மாதங்களுக்கு முன் நடந்தகளவு சம்பவத்திலும் இவ்விளைஞன் சம்பந்தப்பட்டிருப்பதும் தெரிய வந்தது. தாம் அங்கு திருடிய காதுத் தோட்டை திருக்கோணமலையில் விற்றதாக அவர் கூறினார். இதையடுத்து இவர் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். பொலிஸார் இவர் சம்பந்தமான விசாரணைகளில் மேலும் ஈடுபட்டுள்ளனர்.

---

சோவியத்தின் அணுவல்லரசு

## மகாநாட்டு யோசனையை சீனு நிராகரித்தது

### பிராவ்தா கண்டனம்

மாஸ்கோ, ஆக. 20 ஐந்து அணு வல்லரசுகள் மாநாடொன்றைக் கூட்ட வேண்டுமென்ற சோவியத் அரசாங்கத்தின் ஆலோசனையை சீனு நிராகரித்துள்ளது.

சோவியத் ஆலோசனைக்கு உலகம் பூராவும் கிடைத்துள்ள ஆதரவுடன் சீனுவின் நிலைமை மோதுகிறது என்று 'பிராவ்தா' இதுபற்றி கருத்து தெரிவித்துள்ளது.

மேலும் அதில், பீகிங்கின் நிலைமை போலியானது. ஒருபுறத்தில் அவர்கள் அணுவாயுதங்களுக்கு "எதிராக மூச்சுவிடாமல் போராடப்" போவதாகக் கூறுகிறார்கள். மறுபுறத்தில் இதே லட்சியத்தைக் கொண்ட மாநாட்டைக் கூட்டும் யோசனையை நிராகரிக்கிறார்கள் என்று அரசியல் விமர்சகர் அலக்ஸி லுகோவெட்ஸ் எழுதியுள்ளார்.

அணுவாயுதங்களை நிர்மூலமாக்கப் 'போராடப் போகும்' சீனு அணுவாயுதங்களை உற்பத்திசெய்யப் போகிறது என்பதில் முரண்பாடு நிறைந்திருப்பதாக அவர் கூறுகிறார்.

சர்வதேச அரங்கில் வதட்ட நிலைமையை உக்கிரப்படுத்துவதில் முனைந்துள்ள சீனத் தலைமை அதிகாரத்துவத்தை கைவிடவில்லை என்பதையே இது அத்தாட்சிப்படுத்துகிறது.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சவால் விடும் இவர்கள் இக்கோஷத்துக்குப் பின்னால் தஞ்சம் புகமுடியாது. செக்கோஸ்லாவாக்கிய பத்திரிகையான 'ருடே பிரவோ' கூறுவதற்கிணங்க இவர்கள் வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டனர். அமெரிக்காவின் விருப்பத்திற்கு ஏற்ப சீனக் கொள்கை மேலும் மேலும் சோவியத் எதிர்ப்பு திசையில் செல்கிறது என்று அலக்ஸி லுகோவெட்ஸ் கூறுகிறார்.

---

## சகாயப்பணம் திருப்பித் தரப்படவில்லையாம்

பருத்தித்துறை வெள்ளி

இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் பலர் விவசாயப் படையில் இருந்தபோது தாம் செலுத்திய சகாயப் பணம் மேற்படி விவசாயப் படை கலைக்கப்பட்டுப் பல மாதங்களாகியும் இதுவரை தமக்குத் திருப்பித் தரப்படவில்லையென விவசாய காணி அமைச்சர் திரு எச் கொப்பேக்கடுவவுக்கு மகஜர் ஒன்றை அனுப்புயுள்ளனர்.

---

## ஜீப் வண்டி குடை சாய்ந்தது

பருத்தித்துறை வெள்ளி

இ போ சவின் பருத்தித்துறை டிப்போவுக்குச் சொந்தமான ஜீப் வண்டி ஒன்று மாலி சந்தை என்னும் இடத்தில் குடைசாய்ந்தது. தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

---


வட்டியுடன் இனும் !!

ரூபா 500/- ஐஞ்னூறுக்கு

வருடம் 7 சதவீத வட்டி கொடுக்கப்படும்:

இதை ஏழு நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்

ஒவ்வொரு மாதமும் அதிட்டமுள்ள ஒருவருக்கு

ரூபா 25/- இருபத்தைந்து இனமாகக் கொடுக்கப்படும்

மறு விபரங்களுக்கு:

தம்பி அன் கோ,

வண்ணார்பண்ணை.

மேற்குறித்த திட்டத்தின்படி சென்ற மாதம் அதிட்டமாக ரூபா இருபத்தைந்து (ரூ. 25/-) பெற்றவர்.

திருமதி S. முத்துப்பிள்ளை

திருநெல்வேலி வடக்கு.

# "அரச ஊழியர் நஷ்டஈடு வழங்க சட்டம் வேண்டும்"

## அ. எ.வி. சங்கம் தீர்மானம் கொண்டுவரும்

யாழ்ப்பாணம், வெள்ளி "அரசாங்கத் திணைக்களங்களுக்குப் பொதுமக்கள், தொழிற்சங்கங்கள் எழுதும் கடிதங்களுக்கு உரிய காலத்தில் மறுமொழி அனுப்பப்படாமலும், சில வேளைகளில் அறவே அனுப்பப்படாமலும் பாரிய நஷ்டம் விளைவிக்கப்படுவதாகவும், திறைசேரி மற்றும் அரசாங்க திணைக்களங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களுக்கு குறைந்தது இருவாரங்களுக்குள் பதில் அனுப்பப்படவேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் திணைக்கள தலைவர்களோ, பொறுப்பான பிற ஊழியரோ பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கக் கண்டிப்பாக வழிவகுக்கும் சட்டம் ஒன்றை ஆட்சி மன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்" என அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 10-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கொண்டுவரப்பட இருக்கிறது.

புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கான பாதுகாப்புகளை வழங்க அரசு மறுத்துவிடும் புதிய அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பேண தமிழ்ப்பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து இயங்காததையிட்டும் சங்கம் கவலை தெரிவிக்கும் அதேசமயம் புதிய அரசியல் அமைப்பில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள தமிழ்க்கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி செயல்படுத்த முனைந்த வல்வெட்டித்துறைத் தமிழ் அன்பர்களைச் சங்கம் பாராட்டுவதாகவும் கூறும் தீர்மானமும், நியாயமான தொழிற்சங்க நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்குமுகமாக சிங்களத் தலைமையின் கீழ் வேலைநீக்கம் செய்யப்பட்ட சகல தமிழ் ஊழியர்களையும் மீண்டும் வேலைக்கு அழைக்கும்படி அரசைக் கோரும் தீர்மானமும் இக்கூட்டத்தில் பிரேரிக்கப்படவிருக்கின்றன.

மற்றும் மீண்டும் ஞாயிறு விடுமுறையை அரசு அமுல் நடத்துவதைப்பாராட்டியும் வாரத்தில் 5 நாள் வேலைத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டுமெனக் கோரியும், கடந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட எஸ்.பி.டி. சில்வா ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையை புதிய அரசு பெற்று அதனை அமுல் நடத்தவேண்டுமெனக் கோரியும், ஏனையசமய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவது போன்று சைவசமய அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமை தோறும் சமய வழிபாட்டுக்காக இருமணிநேர சிறப்புவிடுமுறை வழங்கக் கோரியும் அரசாங்க ஊழியருக்கு வீட்டுவசதி அளிக்கவும் தோட்டங்களிலுள்ள சகல பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்றுக்கொள்வதுடன் அவற்றில் தாய் மொழியிலேயே கல்வி கற்கவேண்டிய சகல வசதிகளையும் அளிக்கவும் வேண்டுமென்று கோரியும் இக்கூட்டத்தில் தீர்மானங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன. வேறுபல தீர்மானங்களும் சங்கக் கிளைகளின் தீர்மானங்களும் தனி உறுப்பினர் தீர்மானங்களும் இக்கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கின்றன.

சங்கம் வெளியிட்டுள்ள பத்தாவது ஆண்டு அறிக்கையில் அதன் சாதனைகள் பற்றிய விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## முடிக்குரிய காணிகள் வசதி உள்ளவர் வசமாகிறதாம்

யாழ்ப்பாணம், சனி வவுனியா மாவட்டத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் முடிக்குரிய காணிகளை செல்வாக்குள்ளவர்களும் பணவசதி படைத்தவர்களும் சந்தேகத்துக்கு இடமாகக் கள்ளஉறுதி முடித்து தங்கள் ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கின்றனர். இந்த மாவட்டத்தில் பெரும் தொகையான ஏழை விவசாயிகள் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள காணி வசதியற்று கஷ்டப்படும்போது மேலே குறிப்பிட்ட காணிகள் பிரயோசனமற்ற நிலையில் இருக்கின்றன எனவே இங்ஙனம் சந்தேகத்திற்கு இடமான காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் காணி வசதியற்ற விவசாயிகளுக்கும் பகிர்ந்துகொடுக்க வேண்டும்"

இவ்வாறு நடுச்செட்டிக்குளம் கிராமசபைத் தலைவரும் வவுனியா மாவட்ட கிராமசபைகள் சமாசசெயலாளருமான திரு. பொ. நிரஞ்சன சம்பந்தன் சமீபத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

மேலும் அவர் தமது கடிதத்தில் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் நன்கு வளர்ந்து நல்ல பலன் தரக்கூடிய சிறந்த வளமான செம்மண் நிலங்கள் வவுனியா மாவட்டத்தில் இருக்கின்றன. இந்த நிலங்கள் எல்லாம் கள்ளஉறுதிகள் முடிக்கப்பட்டு ஒருசிலரின் ஆதிக்கத்தில் இருப்பதால் மேற்படி பயிர்களை செய்வதற்கு காணிகள் போதாதிருக்கின்றன. எனவே இங்ஙனம் சந்தேகத்துக்கிடமான முறையில் இருக்கும் காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்று உழைப்பு மிக்கவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தால் அக்காணிகளில் வெங்காயம் மிளகாய் உருளைக்கிழங்கு போன்ற பயிர்களைச்செய்ய ஏதுவாக இருப்பதுடன் ஏனைய மாவட்டங்களைப் போல வவுனியா மாவட்டமும் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மிளிர இடமுண்டு எனவும் கூறியுள்ளார்.

## பலாலி கொலைமுயற்சி வழக்கு எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், சனி பலாலி கொலை முயற்சி வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் நடைபெற்றது.

ஜூரி சபையினர் எதிரி சுற்றவாளி என ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கில், பலாலியில் 70ம் ஆண்டு மார்ச் மாதம் 14ந் திகதி செபமாலை என்பவரைக் கொலை செய்ய முயற்சித்ததாக ஆரோக்கியநாதன் என்பவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

எதிரி சார்பில் அட்வகேட் எஸ். நாகராசா, புறக்டர் வி. யோகேஸ்வரன் அனுசரணையுடன் ஆஜரானார். எதிர்க்காக அரசாங்கத்தால் புறக்டர் நியமிக்கப்பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை இம்மாதம் 23ந் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

### காரை பொலிஸ் தேடுகிறது

வல்வெட்டித்துறை, வெள்ளி கரவெட்டியைச் சேர்ந்த 66 வயதான சி. சுப்பிரமணியம் கரவெட்டி சாமியன் அரசடி வீதியில் வைத்து கார் ஒன்றினால் மோதப்பட்டு பலத்தகாயத்துக்குள்ளானார் இவர் உடனடியாக மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவரை மோதிய காரை பொலிசார் தேடிவருகின்றனர்.

### அயராது உழைத்த உத்தமன்

யாழ்ப்பாணம் வெள்ளி டாக்டர் நாகநாதனின் மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும், இலங்கை வாழ் மக்களினதும் குறிப்பாகத் தமிழ் மக்களினதும் சிறப்பாகத் தமிழ் அரசாங்க ஊழியர்களினதும் உரிமைகளைப் பெறுதற்கும் பெற்ற உரிமைகளைப் பேணுதற்கும் அயராதுழைத்த உத்தமனின் கள்ளமிலா உள்ளத் துதித்த கொள்கைகள் என்றும் நின்று நிலைபெறுவதாக.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க மன்னார் கிளைக்கூட்டம் திரு. இ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற போது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 8 1/2 அடி யானை கட்டுப் பலி

கிளிநொச்சி, வெள்ளி "எட்டரை அடி உயரமுள்ள நீண்ட தந்தத்தையுடைய யானையொன்று துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியது இச்சம்பவம் கிளிநொச்சி அக்கராயன் குளக்கட்டிற்கு அண்மையில் நடந்தது இதனை தேசிக்கண்ட நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த ஒருவரின் முயற்சியின் பலனாக பல்லாயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த தந்தங்கள் களவுபோகாமல் தடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

வனவிலங்கு அதிகாரி தலைமையில் ஸ்தலத்துக்கு விரைந்த கோஷ்டியினர் தந்தத்தைக் கைப்பற்றினராம். துப்பாக்கி பிரயோகம் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதெனத் தெரியவருகிறது.

(தாவ. தி)

### பதவி உயர்வு

சாய்ந்தமருது, வெள்ளி மட்டக்களப்பு புதூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பதில் தலைமை யாசிரியராகக் கடமையாற்றிய திரு பொ கந்தையா இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து முதலாம் தர தலைமை யாசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

### 'கந்தன் வரவழைப்பு'

அம்பன், வெள்ளி அம்பனூர்க் கவிஞர் க. சிதம்பரப்பிள்ளை இயற்றிய 'கந்தன் வரவழைப்பு' என்ற அருட்பா புத்தக வெளியீட்டு விழா நேற்று முன்தினம் அம்பன் பெரியம்பன் பிள்ளையார் கோவில் முன்றலில் குடத்தனைக் கிராமசபை முதல்வர் வை. துரையப்பா தலைமையில் நடைபெற்றது.

---

ஈழநாட்டில்

## அழகும் கலையும் வளர

## பெண்கள்பணி அவசியம்"

பண்டத்தரிப்பு; வெள்ளி நம் நாடு கலையிலும் அழகிலும் மேலோங்கி வளர பெண்களின் பெரும்பணி அவசியம் வேண்டப்படுகிறது. இப்பணியில் வெற்றிபெற வேண்டுமானால் கல்லூரிப்பருவத்திலிருந்தே பெண்கள் தேகப்பயிற்சிகளிலும் விளையாட்டுகளிலும் ஆர்வம் காட்டுதல் அவசியம். அப்பொழுதுதான் சுகமும் பலமும் செயற்திறனும் படைத்த புதியசந்ததியை நம் தாய்மார் தோற்றுவிக்க முடியும்.

பண்டத்தரிப்புப் பெண்கள் உயர் கல்லூரியின் இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றிய பண்டத்தரிப்பு முன்னைக்கிராமசபைத் தலைவர் திருமதி பேர்ளி அத்தனுகியார் தமது பேச்சில் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி புதிய அதிபர் திருமதி காயத்திரிதேவி கணேசனின் தலைமையில் நிகழ்ந்த இவ்விழாவில் திருமதி பேர்ளி அத்தனுகிரியர் தொடர்ந்து கூறியதாவது: நகரிகம் பெற்றநாடுகள் எல்லாம் விளையாட்டுக்களைப் பெரிதும் போற்றிவருகின்றன; விளையாட்டுப்போட்டிகளை நடத்துவதில் நமது அரசு பெரும் பணம் செலவு செய்கிறது. கல்லூரிகளில் விளையாட்டுத்துறை பாடவிதானத்துள் சேர்க்கப்பட்டு அவற்றிற்குரிய ஆசிரியர்களையும் அரசு கொடுத்துதவுகிறது. நாமும் நமது முற்போக்கான அரசின் நல்ல திட்டங்களுக்கு ஒத்துழைப்பு அளித்து கட்டுப்பாட்டுடனும் கடின உழைப்புடனும் நாட்டைச் சிறப்பிக்க முன்வரவேண்டும்

செல்வி சரோஜினிதேவி தேவராசா இவ்விழாவைத் திறம்பட ஒழுங்கு செய்திருந்தார்.

## ஆலய நிர்வாகிகள்

தாவடி, வெள்ளி தாவடி சிற்றம்பலம் தான்தோன்றிப் பிள்ளையார் கோவில் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பெற்றனர்.

தலைவர்: திரு செ சோதிநாதன், காரியதரிசியும், தனாதிகாரியும்: திரு க சின்னத்துரை. பஞ்சகர்த்தாக்கள்: திருவாளர்கள் கு தம்பையா, க பார்த்தசாரதி, சோ ஞானப்பிரகாசம், தா சி குமாரசாமி, இ நடராசா ஆலோசனைச் சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் க த அப்பச்சிப்பிள்ளை, சி வல்லிபுரம், க நடராசா, ய ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பெற்றனர்.

## சந்தேக நபர் பிணையில்சென்றார்

புத்தளம், வெள்ளி புத்தளம் மீன்சந்தையில் ஐனுப் ஹமீத் ஹுசைன் என்பவர் மார்பில் கத்தியால் குத்தப்பட்டதாகப் புத்தளம் பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

சந்தேகநபரான ஜனுப் இப்ருகிம், புத்தளம் நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். நீதிபதி சந்தேக நபரை 750 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

காயமடைந்த ஜனுப் ஹமீத் ஹுசைன் சிகிச்சைக்காகக் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

அம்பன், வெள்ளி படுத்தித்துறை ஆரம்பசுகாதார சேவைக்கான கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவராகப் பருத்தித்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளைத்தலைவரான திரு. வே. நாகநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

## திருடப்பட்ட ஆபரணங்களை பொலிஸார் கைப்பற்றினர்

புத்தளம், வெள்ளி புத்தளம் பொலிசாரின் தீவிர நடவடிக்கையால் இரும்புப் பெட்டியோடு திருடப்பட்ட ஆபரணங்கள் தவல் கிடைக்கப்பெற்ற சில மணித்தியாலங்களில் கண்டுபிடிக்கப்பட்டன.

புத்தளம் கரைத்தீவைச் சேர்ந்த ஐனுப்மரைக்காரின் 970 ரூபா பெறுமதியான ஆபரணங்கள் வைக்கப்பட்டிருந்த இரும்புப்பெட்டியுடன் தமது வீட்டிலிருந்து திருடப்பட்டு விட்டதாக புத்தளம் பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததின் பேரில் நிலைய உதவியதிகாரி திரு. மேரின் பெனுன்டோ, சார்ஜன் விஜயகோன் உடன் ஸ்தலத்திற்கு விரைந்தார். தீவிரமாக விசாரணைசெய்து இருசந்தேக நபர்களைக் கைது செய்தார்.

சந்தேகநபர்கள்கொடுத்த சாட்சியத்தில் பிரகாரம் சந்தேக நபர்களுடன் ஆபரணங்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்கு 5 மைல் தூரம் நடந்து சென்று சேற்றில் அப்பொருட்கள் புதைக்கப்பட்டிருந்ததை கண்டு பிடித்தனர்.

பொலிஸ் உதவியதிகாரி சந்தேகநபர்களை புத்தளம் நீதிபதி திரு கே. பாலகிட்ணர் முன்னிலையில் ஆஜர் செய்தார் நீதிபதி சந்தேக நபர்களை தலா 1,500ரூபா பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை ஒத்திவைத்தார்.

# சீன டேபிள் டெனிஸ் கோஷ்டி இன்று யாழ். வருகிறது

## நகரமண்டபத்தில் நாளை இலங்கையுடன் மோதும்

யாழ்ப்பாணம், சனி

நாளை மாலை யாழ். நகர மண்டபத்தில் இலங்கை டேபிள் டெனிஸ் கோஷ்டியுடன் மோதவிருக்கும் சீன தேசிய டேபிள் டெனிஸ் கோஷ்டியினர் இன்று மாலை 8 மணிக்கு ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்தடைவர்.

சீன டேபிள் டெனிஸ் கோஷ்டிக்கும், இலங்கை டேபிள் டெனிஸ் கோஷ்டிக்குமிடையிலான 2-வது டெஸ்ட் போட்டி நாளை மாலை யாழ். நகர் மண்டபத்தில் நடைபெறும். இலங்கை தேசிய விளையாட்டுக் கோஷ்டிக்கும், பிறநாட்டு தேசிய விளையாட்டுக் கோஷ்டிகளுக்குமிடையில் நடைபெறும் 'டெஸ்ட்' போட்டிகள் யாழ். நகரில் நடைபெறுவது இதுவே முதற் தடவையாகும்.

சீன டேபிள் டெனிஸ் கோஷ்டியும், இலங்கை டேபிள் டெனிஸ் கோஷ்டியும் இன்று மாலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைவார்கள். இவர்களை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், யாழ். நகர மேயர் திரு அல்பிரட் துரையப்பா, யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம், இலங்கை - சீன நட்புறவுச் சங்க யாழ். கிளை அங்கத்தவர்கள் ஆகியோர் மலர்மாலை சூட்டி வரவேற்று தமிழ் கலாச்சாரப்படி நாதஸ்வர ஓசை முழங்க ஊர்வலமாக விக்ரோறியா வீதியில் உள்ள சுபாஸ் விடுதிச்சாலைக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

சீனக் கோஷ்டியினர் நாளை பகல் காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலைக்கு விஜயம் செய்துவிட்டு, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலைக் கேணியில் நீராடுவார்கள். அதன்பின் இலங்கை - சீன நட்புறவுச் சங்கத்தினர் இவர்களுக்கு வரவேற்பு ஒன்று அளிப்பார். மாலை தேநீர் விருந்தின் பின் யாழ். நகர மண்டபத்தில் 6 மணிக்கு சீன - இலங்கை கோஷ்டிகளுக்கிடையிலான 2-வது டேபிள் டெனிஸ் டெஸ்ட் போட்டி ஆரம்பமாகும்.

இரவு இரு கோஷ்டிகளுக்கும் யாழ். வாடி வீட்டில் இரவு விருந்து அளிக்கப்படும்.

### சீனக் கோஷ்டி விபரம்

சீனக் கோஷ்டிக்கு வீரர் கலாங் தலைமை தாங்குகின்றார். இவர் இவ்வருடம் ஆண்கள் பிரிவில் உலகச் சாம்பியன் பட்டத்தைப் பெற்றவர். மற்றும் உலகப் புகழ் பெற்ற வீரர்களான லீபூஜுங், லீசிங் குவாங், லீயாங்கோ லியாங் ஆகியோரும் இக் கோஷ்டியில் உள்ளனர்.

சீனக் கோஷ்டியின் பெண்கள் பிரிவில், உலகச் சாம்பியன் பட்டத்தை மூன்று தடவைகள் பெற்ற வீராங்கனை லின் ஹியூஹியுங், உலகில் தற்போது இரண்டாவது இடத்தை வகிக்கும் வீராங்கனை சென் மிங் சின்னும் இருக்கின்றனர்.

1961-ம் ஆண்டில் சீனக் கோஷ்டி முதல் தடவையாக உலகச் சாம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டது. 1965-ல் சீன பெண்கள் கோஷ்டி உலக சாம்பியனானது. பின்னர் 1971-ல் ஆண்-பெண் இரு கோஷ்டியினர் மீண்டும் உலகச் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினர். 1967, 1969-ம் ஆண்டுகளில் இவர்கள் உலகப் போட்டியில் கலந்து கொள்ளவில்லை.

### இலங்கைக் கோஷ்டி விபரம்

இலங்கை கோஷ்டிக்கு வீரர் ஜி. என். ஞானம் தலைமை தாங்குகின்றார். இலங்கை டேபிள் டெனிஸ் வீரர்களில் தற்போது முன்னணி வகிக்கும் இவர், கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு விஜயம் செய்த ரஷ்ய டேபிள் டெனிஸ் கோஷ்டியில் உலகப் புகழ் பெற்ற வீரர் ஒருவரை ஒரு போட்டியில் தோற்கடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் பிரிவில் அங்கம் வகிக்கும் மற்றைய வீரர்களின் விபரம்: என். எச். பெரேரா, ஏ. தோமஸ், ஜி. சமரவீரா. பெண்கள் பிரிவின் விபரம்: பெல் வீரக்கோன், என். டானியல், சி. றூடோல்ப், என். சக்கடோ. கனிஷ்ட பிரிவின் விபரம்: எப். இஷ்தின், ஜி. நரீந்தால், கே. ஹூசேன்.

### 5 டெஸ்ட் போட்டிகள்

சீனக் கோஷ்டி இலங்கைக் கோஷ்டியுடன் மோதும் ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று சிநேகபூர்வமான போட்டிகளிலும் கலந்துகொள்ள விருக்கின்றது. இப்போட்டிகள் அனைத்தும், இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும், நடைபெறும்.

சீன - இலங்கை கோஷ்டிகளுக்கிடையிலான 1-வது டெஸ்ட் போட்டி அண்மையில் கொழும்பிலுள்ள சுகததாச உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது. 2-வது டெஸ்ட் போட்டி நாளை யாழ். நகர மண்டபத்திலும், 3-வது டெஸ்ட் போட்டி இம்மாதம் 24-ம் திகதி கண்டி பேராதெனியா பல்கலைக்கழக மண்டபத்திலும், 4-வது டெஸ்ட் போட்டி இம்மாதம் 28-ம் திகதி பண்டாரவளையிலும், 5-வது டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் 3-ம் திகதி கொழும்பிலும் நடைபெறும்.

இலங்கை 'பிறசிடன்லெவின்' கோஷ்டிக்கும், சீனக் கோஷ்டிக்குமிடையில் நடைபெறவிருக்கும் மூன்று சிநேகபூர்வமான போட்டிகள், நதேக்லையில் இம்மாதம் 26-ம் திகதியும், மொறட்டுவாவில் இம்மாதம் 30-ம் திகதியும், காலியில் இம்மாதம் 31-ம் திகதியும் நடைபெறும்.

சீனக் கோஷ்டியினரை யாழ்ப்பாணத்துக்கு அழைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் கச்சேரி பிரதி அதிபர் திரு. எஸ். சின்னத்துரை மேற்கொண்டிருந்தார்.

## நாளை கருத்தரங்கம்

யாழ்ப்பாணம் வெள்ளி

நாடகம் எழுதுதல், நாடகம் தயாரித்தல் என்னும் விடயங்கள்பற்றி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை மாலை கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது. திரு போ செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கை கலையரசு க. சொர்ணலிங்கம் ஆரம்பித்து வைப்பார். உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியில் வெற்றிபெற்றோர்

மாவிட்டபுரம், வெள்ளி

அராலியில் நடந்த மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியில் அராலியைச் சேர்ந்த செல்வமணி முதலிடம் பெற்றார்.

அராலி சனசமூக நிலைய ஆதரவில் நடந்த இப் போட்டி 'ஏ' 'பி' என இரு பிரிவாக நடாத்தப்பட்டது. போட்டி முடிவுகள் வருமாறு

'ஏ' பிரிவு:- செல்வமணி (அராலி); எஸ். கனகரத்தினம் (உடுவில்); எஸ். சின்னையா (மூளாய்).

'பி' பிரிவு: எஸ் அப்பாப்பிள்ளை (சுன்னாகம்); எஸ் ராமலிங்கம் (மாதகல்); என். சுப்பிரமணியம் (மாவிட்டபுரம்),

## வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று

டிராக்டர் முதலிய யந்திர சாதனங்கள் எத்தனைதான் வந்தபோதிலும் ஆடு மாடு எருமை முதலிய கால்நடைகள் இன்றும் இலங்கை விவசாயிகளுக்கு பண்ணைத் தோழர்களாக இருந்து அரிய உதவிசெய்துவருகின்றன. மாட்டுழவு தான் சிறந்த உழவென்று எந்தக் கமக்காரனும் தயக்கமில்லாமல் கூறுவான். மாட்டெருவும் ஆட்டெருவுமே சிறந்த உரங்கள் என்று எந்தத் தோட்டக்காரனும் தாராளமாக ஒப்புக்கொள்ளுவான்; கமவேலைகள் பலவற்றிற்கு கால்நடைகள் உதவுவதோடு பால் தயிர் நெய் போன்ற போஷாக்குள்ள உணவு களைத் தருகின்றன.

இருப்பினும் கால்நடைகளை கவனமாகப் பாதுகாத்து நல்ல தீனிகொடுத்து நோய்கள் வராமல் தடுத்து அபிவிருத்திசெய்வதில் ஒல்லாந்து டென்மார்க் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு நாம் எவ்வளவோ பின்தங்கியுள்ளோம். முக்கியமாக நோய்தடுப்புவேலைகளில் நாம் பொதுவாக அதிக கவனம் செலுத்துவதில்லை. இதன் காரணமாக பட்டியிலுள்ள கால்நடைகளாகும் மந்தையிலுள்ளவையாகும் அடிக்கடி பலவிதநோய்களினால் பாதிக்கப்பட்டு இறந்துவிடுகின்றன இவ்விருத்தியும் குன்றிப்போய்விடுகிறது.

நான்கு மணித்தியாலத்துக்கிடையிலே மரணம் சம்பவிக்கலாம். சீக்கிரமே மரணம் உண்டாவதால் நடைமுறையில் இந்நோய்க்கு சிகிச்சை கிடைக்காதெனலாம். ஆனால் மற்ற மிருகங்களுக்கு நோய் பரவாதபடி தடுத்துவிடுவதற்குச் சில பரிகாரங்கள் உண்டு

இறந்த மிருகங்களின் மலசலம் மூலமாக இந் நோய்க் கிருமிகள் மண்ணுக்குள் செறிந்து புதைந்துவிடுகின்றன. அது அடைப்பான் நோய் உண்டாவதற்கு நிரந்தரமான ஏதுவாயிருக்கும். நோய் கண்ட மிருகங்களோடு சேர்ந்து புழங்குவதாலும் அவற்றின் தீனி, எச்சம் முதலியவற்றைத் தொடுவதாலும்கூட நோய் பரவும். மாட்டு இலையான் முதலிய இரத்தம் உறிஞ்சும் பூச்சி வகைகளும், காகம், கோழி முதலிய பறவைகளும் நோய்க்கிருமிகளைப் பரப்புவதற்கு ஏதுவாயிருக்கும்.

இறந்த மிருகத்தை எக்காரணம் கொண்டும் வெட்டித் கீறிச் சோதனைசெய்யப்படாது. கிருமிநாசினியில் பஞ்சை அல்லது துணியைத் தோய்த்து மூக்கு, வாய் முதலிய துவாரங்களை அடைத்து விடவேண்டும். உடலை நிலத்தில் வெகு ஆழமாகப் புதைக்கவேண்டும் அல்லது சுட்டெரித்துவிடவேண்டும். மற்றைய மிருகங்களுக்கு மிருக வைத்தியரைக்கொண்டு தடுப்பூசி மருந்து போடுவது அவசியம்.

## விவசாயப் புலம்

வறண்ட பிரதேசங்களில் காண்டியம் மிகுதியான காலங்களில்; போதிய பசுமையான உணவும் குடிப்பதற்கு நல்ல தண்ணீரும் கிடைக்காதமையால் கால்நடைகளுக்கும் கோழி முதலிய பறவைகளுக்கும் வெப்ப நோய்கள் உண்டாவது சகஜம். பூநகரிப் பகுதியிலும் தீவுப்பகுதியிலும் மந்தை பாகத்திலிருந்தும் மாடுகள் திடீரென்று விழுந்து விழுந்து சாவதாக சமீபத்தில் நான் கேள்விப்பட்டேன்.

மந்தையிலுள்ள மாடுகளுக்கு ஏற்படும் நோய்களில் முக்கியமானவை அடைப்பான் (Anthrax), வெதப்பு நோய் (Rinderbest), கால் நோய் வாய்நோய்; குருதிக் கழிவு; கோமாரி; செஞ்சல நோய்; கருவுதக்கை என்பனவாகும்.

அடைப்பான் என்னும் நோய் ஆடு மாடு முதலிய எல்லா மிருகங்களையும் மனிதரையும் கூடத் தாக்கக் கூடிய ஒரு பொல்லாத தொற்றுநோய். இது கண்ட மிருகத்தின் மூக்கிலிருந்தும் மலவாசலிலிருந்தும் இரத்தம் வடியும். சுமார் 105 டிகிரிக்கும் மேற்பட்ட கடுமையான காய்ச்சல், நடுக்கம் தள்ளாட்டம் மார்புத் துடிப்பு முதலியன இதன் முதற் குறிகளாகும். நோய் தொடங்கிய இருபத்து

தொண்டை அடைப்பான் (ஸெப்ரிக்கேமியா) என்ற தொற்றுநோயைச் சிலர் குருதிக்கழிவு என்றும் குறிப்பிடுவதுண்டு. இது அநேகமாக இளம் கால்நடைகளிலும் பால்குடி மறக்கும் பருவத்திலுள்ள கன்றுகளிலும் உண்டாகிறது. இதுவும் கடுமையான காய்ச்சலுடன் ஆரம்பித்துப் பின்னர் தொண்டை, தலை முதலிய உறுப்புகளில் மெதுவான வீக்கமும் அசைப்பும் காணப்படும். சுவாசிப்பதில் கஷ்டமும் தீனியில் வெறுப்பும் உண்டாகும். சில நாள் செல்லக் குடலும் தாக்கப்

(6-ம் பக்கம் பார்க்க)

29-வது இலக்க மகாஜன சம்பத

மகாஜன சம்பத

மேலும் பல செல்வங்களை உங்களுக்கு வழங்க இருக்கின்றது

விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்

தேசிய லொத்தர் சபை

சிறந்த தரமான அச்சுவேலைகளுக்கு

'ஈழநாடு'

வர்த்தக அச்சகப்பகுதி

யாழ்ப்பாணம்.

### மணிவாக்கு

பெரிய விஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக்கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும்.

—ஜான்சன்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna Telephone: 389

சாந்திரமான விரோதிகிருது வருஷம் ஆவணிமாதம் 5-ந் திகதி (21-8-71)


## பாகிஸ்தான் பிரச்னை

பாகிஸ்தானின் பிரதம மந்திரியாகவேண்டிய ஷேக் முஜிபுர் ரஹ்மான் இன்று தேசத் துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டு மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளார். விசாரணை சென்ற 11-ந் திகதி ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இதைப் பற்றிப் பின்னர் எவ்வித தகவலுமில்லை. அவர் கதி என்ன ஆகுமோ என்று இலங்கை உட்பட உலகின் கோடிக்கணக்கான மக்கள் கவலைகொண்டுள்ளனர்.

அமெரிக்கா உள்ளிட்டு பல நாடுகளிலிருந்தும் பாகிஸ்தான் ஜனாதிபதியான யாஹ்யாகானுக்கு அவசரத் தந்திகள் ஏராளமாக அனுப்பப்பட்டுள்ளன. ஷேக் முஜிபுர் ரஹ்மான் மீது ரகசியமாக விசாரணை நடத்துவதைக் கண்டிப்பதாகவும், அவரை உடனே விடுதலை செய்யவேண்டுமென்றும் இலங்கையிலுள்ள பல வழக்கறிஞர்களும் ஆசிரியர் சங்கங்களும் தொழிற் சங்கங்களும் சமய சமூக ஸ்தாபனங்களும் பல பிரமுகர்களும் தந்திமூலம் கேட்டுள்ளதை பாகிஸ்தான் அதிபர் அலட்சியம் செய்ய முடியாது. விசாரணையைப் பற்றி இதுவரை எவ்வித தகவலுமில்லை. அது ஒத்திவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. உலக நாடுகளின் கருத்தை ஜெனரல் யாஹ்யாகான் மதித்தே, இவ்விஷயத்தில் அவசரப்படாமல் நிதானமாகக் காரியம் செய்வதாக நினைப்பது தவறாகாது. உடனடியாகச் சுட்டுத் தள்ளிவிடாமல், முஜிபுர் விஷயமாக இவ்வளவு நிதானம் காட்டப்படுவது வரவேற்கத்தக்கதே.

பாகிஸ்தான் பொதுமக்களின் பெரும்பாலோரின் ஆதரவைப்பெற்றவரிடம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவித்து புதிய அரசியல் அமைப்பைத் தயாரிக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடனேயே ஜனாதிபதி யாஹ்யாகான் பொதுத் தேர்தலை வெற்றியுடன் நடத்தினார். ஆனால் துரதிஷ்டவசமாக மேற்குப் பாகிஸ்தானில் வெற்றிபெற்ற பூட்டோவுக்கும் முஜிபுருக்கும் வேற்றுமை ஏற்பட்ட காரணத்தால் நிலைமை விபரீதமாக மாறி கிழக்குப் பாகிஸ்தானே ஒரு மயானமாகி லட்சக்கணக்கான பாகிஸ்தான் மக்கள் பரதேசத்துக்கு அகதிகளாக ஓடி தஞ்சம்புக வேண்டியதாயிற்று.

அந்த அகதிகளை பாகிஸ்தானுக்குத் திரும்பிவருமாறு அதிபர் யாஹ்யாகான் கேட்டும், அவர்கள் அங்கு இன்றைய நிலையில் திரும்பிச் செல்ல அஞ்சுகின்றனர். அங்கு இராணுவ ஆட்சி நடப்பதால் தங்கள் கதி என்ன ஆகுமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருப்பது இயற்கை. இந்த அச்சம் நீங்கி அவர்களுக்குப் புது நம்பிக்கை ஏற்படவேண்டுமாயின், அவர்கள் அமோகமான வாக்குகளால் தெரிவுசெய்த ஷேக் முஜிபுர் ரஹ்மான் அங்கு ஆட்சிப்பொறுப்பை ஏற்பதால்தான் முடியும்.

ஆனால் முஜிபுரைத் தலைவராகக்கொண்ட அவாமி லீக்கை சட்டவிரோதமாக்கியுள்ளதுடன், தேர்தலில் வெற்றிபெற்ற பல அவாமி லீக் பிரதிநிதிகளை அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். முஜிபுர் ரஹ்மான் மீது பாரதூரமான குற்றச்சாட்டுகள் செய்யப்பட்டுள்ளன. அதில் ஒன்று நாட்டைப் பிளவுபடுத்துவதென்பதாகும். ஆனால் அவர் அவ்விதம் எதுவும் கேட்டாரா? அவர் தேர்தல் மூலம் விடுத்த ஆறு கோரிக்கைகள் மண்டல சுயாட்சி வேண்டுமென்பதேயன்றி நாட்டைப்பிளவுபடுத்துவதன்று. பாகிஸ்தான் அனைத்துக்கும் பிரதமராக வேண்டியவர் நாட்டைப் பிளவுபடுத்த வேண்டுமென்று கேட்க நியாயமில்லை. மேலும் அந்த 6 கோரிக்கைகளும் தேசத்துக்குத் தீங்கும் துரோகமுமாகுமாயின், ஏன் அவற்றை அடிப்படையாகக்கொண்டு அவரும் அவரது கட்சியினரும் தேர்தல்பிரசாரம் நடத்த பாகிஸ்தான் அதிபர் அனுமதித்தார் என்று எல்லைக்காந்தி கபார்கான் சரியாகக் கேட்கின்றார்.

நாம் எடுத்த இராணுவ நடவடிக்கையால் பிரச்னை தீருவதற்கு பதில் மிகவும் மோசமாகியுள்ளதையும், அரசியல் தீர்வே இதற்குத் தேவை என்பதையும் பாகிஸ்தான் அதிபர் இதற்கிடையே உணர்ந்திருக்கவேண்டும். எழுபது லட்சம் அகதிகளும் தங்கள் தாய் நாட்டுக்குத் திரும்பி வாழக்கூடிய வழிவகைகளைச் செய்வது அவசரமும் அவசியமுமாகும். இவ்விஷயத்தில் இலங்கை அரசாங்கம் தலையிட்டு ஒரு சுமுகமான தீர்வு ஏற்பட முயற்சி எடுக்கவேண்டுமென்று முன்னரே இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தோம். ஒவ்வொருநாள் தவக்கமும் பிரச்னையை அதிக சிக்கலாக்கி, சம்பந்தப்பட்டவர்களின் அவதியை அதிகரிக்கின்றது.

பாகிஸ்தானிடம் இலங்கை அரசாங்கத்துக்கு அதிக செல்வாக்குண்டு. இலங்கையின் உதவி பாகிஸ்தானுக்கு அதிகம் தேவை. ஆகவே மனிதாபிமானத்தை முன்னிட்டும் பாகிஸ்தானின் இன்றைய பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்க்கவும், ஷேக் முஜிபுர் ரஹ்மானை உடன் விடுதலை செய்து ஜனநாயக முறையில் அரசியல் தீர்வு காண வேண்டுமென்று இலங்கைப்பிரதமர் வற்புறுத்திக்கேட்பதாயின் அதற்கும் பாகிஸ்தான் அதிபர் மறுப்பது சுலபமன்று. இலங்கை சிறிய நாடாகிலும் மிகக்கேந்திர ஸ்தானத்திலுள்ளது. ஆகவே அண்டைநாடான பாகிஸ்தானில் மூண்டுள்ள தீயை அணைத்து அங்கு அமைதி ஏற்படுத்த இலங்கை தன்னாலான எல்லா முயற்சிகளும் எடுக்கவேண்டியது அதன் கடமையாகும்.

### திருக்கேதீஸ்வர ஆலயத்தின்
## விமானம் அமைக்கும் பணத்தை தீவுப்பகுதி மக்கள் வழங்குவர்

யாழ்ப்பாணம், சனி

திருக்கேதீச்சர ஆலயத்தின் மூலஸ்தான விமானத்தை அமைப்பதற்குத்தேவைப்படும் பணம் முழுவதையும் தீவுப்பகுதிமக்களே உபயம் செய்வதென முடிவெடுத்திருக்கிறார்கள்.

திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையின் யாழ்ப்பாணக் கிளைத் தலைவரும், உதவி அரசாங்க அதிபருமான திரு தி. முருகேசம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற தீவுப்பகுதி பிரமுகர்கள் கூட்டமொன்றில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

திருக்கேதீஸ்வர ஆலயபுனருத்தாரண வேலைகளை விரைவில் முடிக்கவேண்டும் இதற்கான நிதிஉதவிகளை மக்கள் கொடுத்துதவவேண்டுமென்றும் திரு முருகேசம்பிள்ளை முன்பதாக எடுத்து விளக்கினார். அதைத் தொடர்ந்து கோவில் விமானத்தை அமைப்பதற்கான பணம் முழுவதையும் தீவுப்பகுதி மக்களே உபயம்செய்வதென்றும் இப்பொறுப்பைத்தங்களிடமே விட்டுவிடும்படி தலைமைச்சபையிடம் கேட்பதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதற்கான பணத்தைச் சேர்ப்பதற்கென்று குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. கூட்டத்தில் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு எஸ். நடராசா நன்றிகூறினார்.

### இரண்டுபேர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது. திசவிக்க அவிஸ்ஸவெல்ல ஆகிய பகுதிகளில் சில இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள கொழும்பு - அவிசாவெல்ல வீதியில் 17-வது கட்டையில் போக்குவரத்து செய்ய இயலாத அளவு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

புயலுடன் கூடிய மழையும், கடல் கொந்தளிப்பும் ஏற்படும் எனவும் மீனவர்கள் கடலுக்குச் செல்லக் கூடாதெனவும் காலி, கொழும்பு, களுத்துறை ஆகிய கரையோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

### விவசாயப்புலம்

5-ம் பக்கத்தொடர்ச்சி

பட்டு வயிற்றோட்டம் உண்டாகும்.

மற்றும் தொற்றுநோய்களுக்கு வைத்தியர்களும் சத்திர வேலைகளைச்செய்து தடுப்பு மருந்துகளைக் கொடுத்து நோய் பரவாமல் தடுக்கலாம்.

கோசாசம் என்பது ஒரு கால்நடைத் தொற்றுநோய். இது மிருகத்தின் வெவ்வேறு உறுப்புகளைத் தாக்கும். சுவாசப்பை தாக்கப்பட்டால் சுவாசிப்பதில் கஷ்டமும் குடல் தாக்கப்பட்டால் வயிற்றோட்டமும் மூளை தாக்கப்பட்டால் மந்தகுணமும் பலவீனமும் உண்டாகும். பசுவின் மடி தாக்கப்படுமாயின் அதில் தீராத புண் உண்டாகும். இதன் பால் மூலம் அதை உட்கொள்ளுபவர்களுக்கும் காசநோய் உண்டாகலாம்.

மேற்சொல்லப்பட்ட நோய்களுக்கு வெற்றிகரமான சிகிச்சை முறைகளைக் கைக்கொள்வது கடினம். பட்டிகளையும் தொழுவங்களையும் சுத்தமாக வைத்திருப்பதாலும் கால்நடைகளுக்கு ஒழுங்காகப் போஷாக்குள்ள உணவு கொடுப்பதாலும் நோய்க்குறி கண்டவுடன் மிருக வைத்தியரிடமோ அரசாங்க கால்நடைப் பண்ணையிலோ தெரிவித்து தடுப்பு மருந்து போடுவதாலும் தொற்றுநோய் பரவி இதர மிருகங்களையும் தாக்காதபடி பார்த்துக் கொள்ளலாம். நோய் கண்டு இறந்த மிருகங்களை உடனுக்குடனே ஆழமாகப் புதைத்து அல்லது கொளுத்திவிடுவதாலும் கிருமிகள் பரவுவதைத் தடுத்து மரணவிகிதத்தைக் குறைக்கலாம்.

—கலப்பை

## இலங்கையில் செய்மதி தந்தித் தொடர்பு நிலையம்

கோட்டை, வெள்ளி

இலங்கையில் செய்மதி தந்தித் தொடர்பு நிலையமொன்றை அமைப்பதற்கான நிதி உதவி அளிக்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது.

மணிலாவிலிருக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி, இந் நிலையத்தை அமைப்பதற்கு 36 லட்சம் அமெரிக்க டாலரை உதவுவதற்கான அங்கீகாரத்தை இன்று வழங்கியது. இந்த நிதி உதவியை ஆசிய அபிவிருத்திவங்கி தனது விசேஷ நிதியிலிருந்து கொடுத்துதவுகிறது.

இப்பணத்தை 25 வருடங்களில் திருப்பிக்கொடுக்க வேண்டும். இப்பணத்தைக் கொண்டு நவீன செய்மதி நிலையம் அமைக்கப்படும்.

இச் செய்தி நிலையம் ஐரோப்பா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், ஹொங்கொங், ஐக்கிய ராஜ்யம், ஜப்பான், லத்தீன், அமெரிக்கா ஆகிய இடங்களுடன் தந்தித் தொடர்பு கொள்ள வசதி அளிக்கும்.

### ஜீ. ஸி. ஈ. சாதாரண பரீட்சை
## எட்டு நாட்கள் மாத்திரம் நடைபெறும்

கொழும்பு, வெள்ளி

இதுவரைகாலமும் கல்வி பொது தராதரப்பத்திர (சாதாரண) பரீட்சைக்கென 21 நாட்கள் ஒதுக்கப்பட்டு வந்தன. இவ்வருடம் டிசம்பர் மாதம் தொடக்கம் எட்டு நாட்களுக்குள்ளாகவே பரீட்சைகளை நடாத்தி முடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரீட்சைப்பகுதி ஆணையாளர் கலாநிதி கே. டி. டபிள்யு. சுமண சூரியவால் உருவாக்கப்பட்டுள்ள புதியதொரு திட்டத்தின்கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சையில் கேள்விப் பத்திரங்கள் முன் கூட்டியே வெளியாவதை முற்றாகவே தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கேள்வித்தாள்கள் பரீட்சை ஆரம்பமாவதற்கு சற்று முன்பதாகவே கிடைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிகிறது.

புதிய ஏற்பாட்டின்படி ஒரு நாளைக்கு நான்குபாடங்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு வகை செய்யப்படுமாம். இதனால் பரீட்சைப் பகுதிக்கேற்படும் செலவு வகைகளில் கட்டுப்படுத்தப்படவுள்ளது.

### காரியாதிகாரி பிரிவுகள்

கோட்டை, வெள்ளி

கச்சேரி முறையை மாற்றி அமைக்கும் திட்டத்தின் அடுத்தாண்டில் 300 புதிய காரியாதிகாரி பிரிவுகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

### வருந்துகிறோம்

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 18-ம் திகதி வெளியான ஈழநாடு இதழில் ஆஸ்பத்திரி ஊழியர் லஞ்சம் கேட்டாராம் என்ற தலைப்பில் வெளியான செய்தியில் எதுவித உண்மையும் இல்லையென மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை மருந்து கலவையாளர் அறிவிக்கிறார். இச் செய்தியால் அவருக்கேற்பட்ட சங்கடங்களுக்காக வருந்துகிறோம்.


### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

11-ம் தர உயிரியல் கலைப்பிரிவுகளில் வெற்றிடங்கள் உள. கல்லூரிக் காரியாலயத்தில் கிடைக்கும் படிவத்தில் 28-8-71க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

அதிபர்
2976



உ
குகமயம்
### சஷ்டி அப்த பூர்த்தி சாந்தி அழைப்பு

சிவநேயர்காள்,

ஸ்ரீமுருகன் திருவருளை முன்னிட்டு நிகழும் ஆவணி மீ 8-ம் திகதி 24-8-71 மங்களவாரம் காலை 8 மணி முதல் தந்தையார் ஐ. வைத்தியநாதக்குருக்கள் (ராசாக்குருக்கள்) அவர்களுக்கு 60-ம் ஆண்டு நிறைவு ஆகையால் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் கிரியா நிகழ்ச்சிகளில் சுற்றத்தார்களும் அன்பர்களும் தம்பதிகளுடன் வருகை தந்து அவர்களின் ஆசிபெறும்வண்ணம் வேண்டிக் கொள்ளுகிறோம்.

வை. சுப்பிரமணியசர்மாவும் மற்றும் மகளும் மருமக்களும். மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

இதனை அழைப்பிதழாகக் கொண்டு வருகை தரவும். 3498


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.